**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 295/2017**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.02.2026 | | |
| பெயர்: | விஜயா<br>(PW– 2 Cross ) | கணவர் பெயர்: | காத்தமுத்து |
| கிராமம்: | வழுதலைக்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 70/2026 |

**<u>3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 09.02.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்–13.29)**

1. நான் சாட்சியமளிக்க வாதிதான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். யார் யார் மீது வழக்கிட்டுள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது.

2. வாதியின் தகப்பனார் சம்மந்தம் இறந்த விபரம் எனக்கு தெரியும், ஆனால் தேதி ஞாபகமில்லை, புரட்டாசி மாதமாக இருக்கலாம். எந்த தேதியில் உயில் எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த உயிலில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் எனது கணவர் காத்தமுத்து 2வதாக கையெழுத்து செய்துள்ளார்.

3. வழுதலைக்குடியை சேர்ந்த சுப்ரமணியன் மகன் ராஜேந்திரன் (உயிலில் முதல் கையெழுத்து செய்தவர்) என்பவர் நல்ல மனநிலையில் தான் உள்ளார் என்றால் சரிதான். வாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு

ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயில் எழுதப்பட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்பதால் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.36)**